தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

" அனைவரும் கற்போம் " " அனைவரும் உயர்வோம் "

அனுப்புநர்
மாநில திட்ட இயக்குநர் ,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
சென்னை– 06.

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
அனைத்து மாவட்டங்கள்

ந.க.எண்:1650/அ11/பயிற்சி/ஒபக/2019 நாள்: 03 .10.2019

பொருள். ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2019–20 தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலை ஆசிரியர்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பணியிடைப் பயிற்சி – NISHTHA – கல்வி மாவட்ட அளவில் / வட்டார அளவில் பயிற்சி வழங்கிடுதல் – நிதி விடுவித்தல் – தொடர்பாக

பார்வை . 1. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்: 1650/அ11/ பயிற்சி/ ஒபக/2019 நாள் : 10. 9. 19

2. இவ்வலுவலகக் கடித ந.க எண். 2369 / A11/SSA /Trg /18 date: 5.09.18

*******

ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மற்றும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றால் வழங்கப்பட்டு வருகிறது. பார்வை 1இல் காணும் இவ்வலுவலகக் கடிதத்தின் படி முதல் சுற்று மாநில அளவிலான NISHTHA பயிற்சி செம்படம்பர் 16 முதல் 28 வரையில் நடைபெற்றது. முதல் சுற்றில் 500 முதன்மைக் கருத்தாளர்களுக்கும் ( KRPs) மற்றும் 100 தலைமையாசிரியர்களுக்கும் (SRPs) பயிற்சி வழங்கப்பட்டது. 6 நபர்கள் ( 5 KRP + 1 SRP ) அடங்கியது ஒரு மாநில கருத்தாளர் குழு. எனவே 100 மாநில கருத்தாளர் குழுக்கள் முதல் சுற்றில் பயிற்சி பெற்றுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக இணைப்பு–1 இல் உள்ளவாறு முதற் கட்டமாக இக்கருத்தாளர் குழுக்கள் நேரிடையாக 1 முதல் 8 ஆம் வகுப்புகளைக் கையாளும் **அரசுப் பள்ளி** ஆசிரியர்களுக்கு 5 நாள்கள் ஒருங்கிணைந்த பயிற்சியாக கல்வி மாவட்டம் /வட்டார அளவில் வழங்க வேண்டும். எனவே கல்வி மாவட்டம் / வட்டார அளவில் ஆசிரியர்களுக்கான முதற்கட்டப் பயிற்சியினை

14.10.19 முதல் 20.11.19 வரை ஐந்து பிரிவுகளாக நடத்தப்பட வேண்டும். இதற்கான முன் திட்டமிடல் கூட்டம் 10.10.19 மற்றும் 11.10.19 ஆகிய நாள்களில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட வேண்டும். இதில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர், மாவட்ட கூடுதல் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் மாநில அளவிலான பயிற்சியில் பங்கேற்ற அனைத்து கருத்தாளர்களும் கலந்துக்கொண்டு பயிற்சியினை நன்கு திட்டமிட வேண்டும்.

NCERT மற்றும் NIEPA மூலம் உருவாக்கப்பட்டுள்ள இப்பயிற்சிக்கான கட்டகங்கள் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது . இக்கட்டகங்கள் அச்சடிக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இப்பயிற்சிக்கென NISHTHA web portal (nishtha.ncert.gov.in) மற்றும் NISHTHA என்னும் கைபேசி செயலி (Android) NCERT மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் மாநில அளவிலான பயிற்சியில் பங்கேற்ற அனைத்து கருத்தாளர்களுக்கும் தங்கள் கைபேசி மூலம் பதிவு (online registration), பயிற்சி முன் தேர்வு, கட்டகங்களுக்கான பின்னூட்டங்கள் மற்றும் பயிற்சி பின் தேர்வு நடத்தப்பட்டது. இது போன்று மாவட்டத்தில் பயிற்சியில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்கும் பிரிவுவாரியாக நடத்தப்பட வேண்டும்.

**பயிற்சிக்குத் திட்டமிடல்:**

- ஒரு ஆசிரியர் 5 நாள் பயிற்சி பெற வேண்டும்.
- அரசுப் பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை அடிப்படையில் மாவட்டவாரியாக மாநில கருத்தாளர் குழுக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.
- 6 நபர்கள் ( 5 KRP + 1 SRP ) அடங்கியது ஒரு மாநில கருத்தாளர் குழு. அதில் முதன்மைக் கருத்தாளர்கள் (KRPs) பாடவாரியாக இருக்க வேண்டும்.
- SRP யாக உள்ள தலைமை ஆசிரியரின் பள்ளிப் பணியில் தொய்வு ஏற்படாத வண்ணம் பயிற்சி நாள்களில் அவருக்குரிய பிரிவுவேளைகளில் (session) மட்டும் வந்திருந்து பயிற்சியளித்தால் போதுமானது.
- ஒரு மாநில கருத்தாளர் குழு குறைந்தது 5 பிரிவுகள் பயிற்சி அளிக்க வேண்டும்.
- ஒரு பிரிவிற்கு (batch) உத்தேசமாக 150 ஆசிரியர்கள் பயிற்சிக்கு அழைக்கப்பட வேண்டும்.

- 50 ஆசிரியர்களுக்கு ஒரு அறை என்ற விகிதத்தில் பிரிவொன்றிற்கு 3 பயிற்சி அறைகள் ஒரே பயிற்சி மையத்தில் இருக்க வேண்டும். பயிற்சி அறைகள் வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் உள்ளதாக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு பயிற்சி அறையிலும் மடிகணினி / கணினி, wifi அல்லது data card இணையதள வசதி, speaker, mic, Projector, திரை (screen), கரும்பலகை போன்ற வசதிகள் இருக்க வேண்டும்.
- குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி நன்றாக இருக்கும்படி பயிற்சி மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- பயிற்சி அளிக்க அந்தந்த மாவட்டங்களில் உள்ள DIET, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மேற்குறிப்பிட்ட வசதியுள்ள பள்ளிகள் ஆகியவற்றை மையங்களாகக் கொள்ளலாம்.
- ஆசிரியர்களை தொடக்க நிலை, உயர்தொடக்க நிலை என இரு பெரும் குழுக்களாக எண்ணிக்கை வைத்துக்கொண்டு பயிற்சியினைத் திட்டமிட வேண்டும்.
- இப்பயிற்சிக்கு முதலில் உயர் தொடக்க நிலை ஆசிரியர்களையும் பின்னர் தொடக்க நிலை ஆசிரியர்களையும் பள்ளிச் செயல்பாடுகள் பாதிக்காதவாறு வரவழைக்க வேண்டும்.
- உயர்தொடக்க நிலையில் உயர்நிலை, மேல்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களை அழைக்கும்பொழுது பாடவாரியாக இல்லாமல் அனைத்துப் பாட ஆசிரியர்களையும் உள்ளடக்கி ஒவ்வொரு பிரிவிற்கும் அழைக்க வேண்டும்.
- கருத்தாளர்கள் பயிற்சிக்கு தேவைப்படும் கற்றல் கற்பித்தல் துணைப் பொருள்களை (TLM) தயார் செய்து கொண்டு செயல்பாடுகள் மூலம் இடைவினை புரிதலுடன் (interaction) திறம்பட ஆர்வமுட்டும் வகையில் பயிற்சி வழங்க வேண்டும்.
- பயிற்சிகட்டகங்கள் TNTP மற்றும் SCERT portal ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வழங்கும் PPT களைப் பயன்படுத்தி பயிற்சி வழங்கப்பட வேண்டும்.
- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் தயார் செய்யப்பட்டு வழங்கப்படவுள்ள கால அட்டவணைக்கேற்ப பயிற்சி அளிக்கும் கருத்தாளர்கள் தமக்குள் திட்டமிட்டு தலைப்புகளைப் பகிர்ந்துகொண்டு பயிற்சியளிக்க வேண்டும்.

**பயிற்சியினைப் பதிவு செய்தல்:**

- பயிற்சியில் பங்கேற்கும் ஆசிரியர்கள் தங்கள் கைபேசி மூலம் NISHTHA web portal இல் பதிவு (online registration), பயிற்சி முன் தேர்வு, கட்டகங்களுக்கான பின்னூட்டங்கள் மற்றும் பயிற்சி பின் தேர்வுகளில் பங்கேற்க வேண்டும். அதனால் பயிற்சிக்கு ஆசிரியர்கள் கைபேசி (Android) கொண்டு வர வலியுறுத்த வேண்டும்.
- NISHTHA web portal இல் login செய்வதற்கு ஆசிரியர்களின் விவரங்கள் இணைப்பு – 2 இல் உள்ள படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு மாநில திட்ட இயக்ககத்திற்கு பயிற்சி துவங்கும் ஐந்து நாள்களுக்கு முன்பாக பிரிவுவாரியாக ( Batch) அனுப்பப்பட வேண்டும்.
- இப்பயிற்சியானது நேரிடையாக MHRD மூலம் கண்காணிக்கப்படவுள்ளது.
- NISHTHA web portal இல் ஆசிரியர்கள் login செய்வதற்கு தேவைப்படும் விவரங்களை பிரிவுவாரியாக சேகரித்து மாநில அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பயிற்சியின் பொழுது ஒவ்வொரு ஆசிரியரும் NISHTHA web portal இல் பதிவு மற்றும் நாள் தோறும் இணையதளத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பிற படிவங்கள் நிரப்பப்பட்டுள்ளதை உறுதி செய்வதற்கும் இது சார்ந்து மாநில அலுவலகத்திலிருந்து தொடர்பு கொள்வதற்கேதுவாக மாவட்டத்தில் EMIS ஒருங்கிணைப்பாளர் மற்றும் கணினி வகைப்படுத்துநர்களுக்கு (programmer) இப்பொறுப்பு அளிக்கப்பட வேண்டும். எனவே EMIS ஒருங்கிணைப்பாளர் மற்றும் கணினி வகைப்படுத்துநர்களின் விபரம் what's app எண்ணுடன் மாநில திட்ட இயக்ககத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு பயிற்சி மையத்திலும் ஆசிரியர்களுக்கு portal இல் பதிவு செய்வதற்கு உறுதுணை செய்யும் பொருட்டு ஒரு பயிற்சி அறைக்கு அந்த வட்டார வளமையத்திற்குட்பட்ட கணினி விபர பதிவாளருக்கு பொறுப்பு அளிக்கப்பட வேண்டும். தேவையான கணினி விபர பதிவாளர் இல்லையெனில் கணினி விபர பதிவில் நல்லாற்றல் பெற்றுள்ள ஆசிரியர் பயிற்றுநருக்கு இந்தப் பொறுப்பை அளிக்கலாம். அம்மையத்தில் பயிற்சியில் கலந்துகொள்ளும் அனைத்து ஆசிரியர்களும் portal இல் பதிவு மற்றும் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்வது அவர்கள் கடமையாகும்.

**நிதிமேலாண்மை:**

தொடக்க நிலை மற்றும் உயர் தொடக்க நிலை வகுப்புகளைக் கையாளும் அனைத்து அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஐந்து நாள்கள் NISHTHA பயிற்சி நடைபெறுவதற்கு தேவைப்படும்

உத்தேச நிதி கணக்கிடப்பட்டு மாவட்டங்களுக்கு **பயிற்சி தலைப்பின்** கீழ் விடுவிக்கப்படுகிறது. இதில் ஒரு பயிற்சி அறைக்கு ஆசிரியர்களுக்கு portal இல் பதிவு செய்வதற்கு பொறுப்பாக உள்ள ஒரு ஆசிரியர் பயிற்றுநர் அல்லது கணினி விவர பதிவாளருக்கு நாளொன்றிற்கு ஆசிரியர்களுக்கு பயிற்சி பங்கேற்பு தொகை வழங்குவது போல இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். பயிற்சிக்கான செலவினம் பார்வை 2 இல் உள்ள இவ்வலுவலகக் கடிதத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், கல்வி மாவட்டம் / வட்டார அளவில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி (குறைந்தது 5 பிரிவுகள்) அளிக்கவுள்ள கருத்தாளர்களுக்கான மதிப்பூதியம் மற்றும் போக்குவரத்து செலவுகளுக்காக நாள் ஒன்றிற்கு ரூ.750 என்ற வீதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இரு கட்ட பயிற்சிக்கும் சேர்த்து 1188 கருத்தாளர்களுக்கு வழங்கத் தேவைப்படும் உத்தேச செலவினத் தொகையும் **மாவட்ட பயிற்சித்** தலைப்பின் கீழ் விடுவிக்கப்படுகிறது. மாவட்ட வாரியாக ஆசிரியர்கள் மற்றும் கருத்தாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி விவரம் இத்துடன் இணைப்பு– 3 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி கல்வி மாவட்டம் / வட்டார அளவில் நடைபெறும் பொழுது முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன விரிவுரையாளர்கள், மாவட்ட கூடுதல் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் போன்ற கள ஆய்வு அலுவலர்களைப் பயிற்சி நடைபெறும் மையங்களுக்குச் சென்று மேற்பார்வையிட வலியுறுத்த வேண்டும்.

எனவே, NISHTHA பயிற்சியினை மேற்கூறியவற்றிற்கேற்ப நன்கு திட்டமிட்டு பள்ளிச் செயல்பாடுகள் பாதிக்காதவாறு செவ்வனே நடத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாநில திட்ட இயக்குநருக்காக